www.tamilarangam.net



# புதிய பாதை

ஆகஸ்ட் 1984

காதம் 2 சுவடு 20

★

உள்ளே

- எமது நோக்கு
- மொசாட் வெளியேறுகிறது
- கிரனடாவில் அமெரிக்க வெறியாட்டம்
- ஆயுதப்போராட்டமும் மக்கள் பங்கும்
- ஒரு தந்தையின் கடிதம்
- 2500 வருட பாரம்பரியமும் பாராளுமன்ற அரசியலும்
- சிங்கள இனவாதமும் கலாச்சார அமைப்புகளும்
- அமெரிக்க சுரண்டலும் தமிழீழப் போராட்டமும்
- கூட்டணியை முறியடிக்க வன்முறை அவசியமா?

★

அன்பளிப்பு 1.50
தமிழகத்தில் 75 காசு
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகாரபூர்வமான ஏடு


# மலையகத் தொழிலாளர் அவலம்

## விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்ய தடை

அரச பெரும் தோட்டயாக்கத் தலைமையகம் திடீரென்று பிறப்பித்த உத்தரவொன்றில் மலையக இளைஞர்கள் வெளியிடங்களில் திருமணம் செய்து மணப் பெண்களை அழைத்து வந்து தோட்டங்களில் பதிவு செய்து வந்த வழமைக்கு தடை விதித்துள்ளது.

சுதந்திரத்தின் பின்பு மிக மோசமாக துயரத்திற்குள்ளாகி அல்லல் படும் மக்கள் மலையக மக்களே. இவர்கள் சிறுபான்மையினராகவும், தொழிலாளர்களாகவும் இருக்கின்ற காரணத்தினால் மோசமான சுரண்டலுக்கும், இன அடக்கு முறைக்கும் உள்ளாகிக் கொண்டிருக்கின்றனர்.

இன்றும் நாட்டின் அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதில் மலையகத் தொழிலாளர்கள் முன்னணியில் இருக்கின்றார்கள். இருந்தும் அரசு அவர்கள் மீதான அடக்குமுறையை கட்டவிழ்த்து விடுவதில் இரக்கம் காட்டுவதில்லை. குடியுரிமை, வாக்குரிமை, தொழிலுரிமை இன்றி அல்லல் படும் இம் மக்கள் இப்பொழுது புதியதொரு சட்டத்தால் மேலும் நசுக்கப்படுகிறார்கள். வெளி இடங்களில் பெண்களை திருமணம் செய்தாலும் முன்பு தோட்ட நிர்வாகம் அத்தகைய பெண்களை தோட்டங்களில் பதிவு செய்து வந்தது. இப்போது அரச பெரும் தோட்ட யாக்கம் இதற்கு தடை விதித்துள்ளது. இதனால் மலையக இளைஞர்கள் விரும்பிய பெண்ணை திருமணம் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

ஆபிரிக்க அடிமைகள், அமெரிக்காவில் விற்பனை செய்யப்பட்ட காலத்திலும், இம்மாதிரி அடிமைகள் விரும்பிய பெண்ணை திருமணம் செய்ய முடியாமல் தடுக்கப்பட்டார்கள். 15ம் நூற்றாண்டு கால அநாகரிக சட்டங்கள் இன்று மலையகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு வருவது பெரிதும் வேதனைக்குரியதாகும்.

வெளிமாவட்டங்களோடு மலையக மக்கள் இதுவரை காலமும் கொண்டுள்ள தொடர்புகள் இனிமேல் துண்டிக்கப்படும். சட்டத்தின் மூலம் மலையக மக்கள் என்றும் தனிமைப்பட்டு வாழும் நிலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மலையக மக்கள் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இந்த அடக்குமுறைகளை சகித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள். விரைவில் துயருறும் மலையக மக்களின் எழுச்சிமிகு போராட்டங்களை காணத் துடிக்கின்றோம். அந்த போராட்டங்களுக்கு ஆதரவாக என்றும் தமிழீழ மக்கள் இருப்பார்கள் என்று உறுதி கூறுகின்றோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது நோக்கு

ஆடி 1983ல் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் ஒரு திடீர் குமுறல் அல்ல இந்த வன்செயல்களுக்கு பின்னால் அநாகரீகமான அரசியல் வரலாறொன்று நிலவி வந்திருக்கிறது. அந்த வரலாறு மோசமான சமூக பொருளாதார அடித்தளத்தை கொண்டிருப்பது வெளிப்படை.

இந்த வன்செயலை தொடர்ந்து தமிழீழ விடுதலை போராட்டத்தில் திடீர் பாய்ச்சல் ஏற்பட்டதும்' விரைவில் தமிழீழம் கிடைக்கவேண்டும் என்று மக்கள் துடி துடித்தார்கள். மக்களின் அவசரத்தை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு சிலர் மூன்று மாதத்தில் தமிழீழம் அமைப்போம் என்றார்கள். மக்களின் எழுச்சியை குறுகிய லாபத்திற்காக பயன்படுத்த முனைந்தவர்கள் தோல்வி கண்டது இன்று வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

இன்று ஆண்டு ஒன்று கடந்து விட்டது! தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழீழமக்களின் விடுதலை வேட்கையாலும், தியாகத்தாலும் உறுதியாலும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். எமது சுதந்திரப் போராட்டம் எமது மக்களாகவே போராடிப் பெறவேண்டும்.

இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான இராணுவப் பலத்தை பெருக்குவதில் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். அதேசமயம் தமிழீழ போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஏற்ற சமூக பொருளியல் தன்மைகளை சாதகமாக மாற்றியமைப்பதில் நாம் முயன்று வருகிறோம்.

தமிழீழ இலட்சியத்திற்காக ஒன்றுபட்ட மக்கள், இன்னும் சாதித்துவேசத்தை கைவிட முடியாமலிருப்பதை சும்மா விட்டு வைக்க முடியாது. தமிழீழப் போராட்டத்தின் தகிக்கும் வெந்தணல் இன்னும் இந்த சிறுமதியாரை மாற்ற முடியாமல் போய்விட்டது வேதனைக்குரியது

தமிழீழத்தில் ஆலயங்களிலும் பொதுத் திணறுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் இன்னும் சமூகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒடுக்கப்படும் மக்களுக்கு உரிமை மறுக்கப்படும்போது தமிழீழ விடுதலைப் போராட்டம் எங்ஙனம் முழுமை பெறும்? தமிழீழம் காணவேண்டும் என்று துடிக்கும் மக்கள் இந்த கொடுமைகளை நீக்க முன்வரவேண்டும். உண்மை விடுதலைக்கு இதுவே இலட்சணமாகும்.

அதே சமயம் கோயில்களிலும், திருவிழாக்களிலும், களியாட்டங்களிலும் கோடிக்கணக்கான பணம் செலவாகிக் கொண்டிருக்கிறது. இப்பணம் ஆடம்பரத்தையும், கர்வத்தையும், போட்டிபொறாமையும் வளர்ப்பதற்கே விரயமாகிக் கொண்டிருக்கிறது.

கோயில்களிலும், தேவாலயங்களிலும் திருவிழாவில் முழங்கும் பட்டாசு வெடிகளும், வாணவேடிக்கைகளும், மின்சார விளக்கு அலங்காரங்களிலும் தமிழ் இனம் இன்னுமா லயித்துக் கொண்டிருக்க வேண்டும்?

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒருசிலரின் அபிலாசையால் பிறந்ததொன்றல்ல. அது ஒரு இனத்தின் இதய வேட்கை. எமது நீண்டகால அரசியலின் படிப்பினையால் பிறந்த போராட்டம் அதை நிறைவு கொள்வதற்கு எமது சமூக-பொருளாதாரத்தில் புரையோடிப் போயிருக்கும் இடர்பாடுகள் நிவர்த்திக்கப்படுவது அவசியமே.

இந்த புனித யுத்தம் பிரகடணப் படுத்தப்பட்ட பின்பு நாம் ஆற்றல் மிக்க பல போராளிகளையும் அப்பாவி பொதுமக்களையும் இழந்து விட்டோம். இந்த துயரத்தை தாங்கமாட்டாது தவிக்கும் மக்கள் ஒரு புறம் தமிழீழ போராட்டத்தை நிறைவு செய்து இழந்த போராளிகளின் கனவுகளை நனவாக்க துடிக்கும் வீரமறவர் மறுபுறம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் யாரோ போராடி அடையும் விடுதலையல்ல அது நாமே முன்னெடுக்க வேண்டிய போராட்டம், வேரூன்றிப் போயிருக்கும் சாதித்துவேசம், ஆடம்பர செலவீனம், அனாவசிய போட்டி, பொறாமைகள் யாவுமே தமிழீழப் போராட்டம் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டிய சவால்களே தமிழீழ மக்கள் இந்த போராட்டத்திற்கு தம்மை தயார் படுத்த வேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலை, ஆயுதத்தால் மாத்திரம் தீர்மானிக்கப்படும் ஒன்றல்ல. தனிமனித குடும்ப உணர்வுகளுக்குள் நடைபெறும் முரண்பாடுகளின் தீர்வும் அவசியமானதே இந்த மோதலில் அடையும் வெற்றியே ஒரு சுபீட்சமான புதிய சமுதாய பொருளாதாரத்தை உருவாக்கப் போகிறது. இந்த வெற்றிக்கு தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது பங்களிப்பை செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

## இலட்சிய வாழ்வு

மனிதனின் இலட்சியம் நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்வதே. அதைவிட்டு அவனது இயற்கையான எண்ணங்களுக்கு எதிராக தற்கொலை செய்துகொள்ள கூடாது. தற்கொலை என்பது சமுதாயத்தின் மீது கொண்ட அனைத்து நம்பிக்கைகளிலும் ஏமாற்றம் ஏற்படும் பொழுது ஏற்படுகின்ற ஒரு உந்துதல்தானே தவிரவேறல்ல. எனவே சமுதாயத்தின் மீது நாம் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற, நல்லதொரு சமுதாயம் உருவாக்கும் போராட்டத்தில் நாம் மரணம் அடைந்துவிட்டால் கூட கவலைப்பட வேண்டியதில்லை. நமது போராட்டம் வெற்றி பெறுவதற்காக நமது மரணம் பயன்படட்டும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒரு தந்தையின் கடிதம்

# மகனே !
# நீ சிறந்த போராளியாகவேண்டும்

எமது இயக்கத்திலுள்ள ஒரு விடுதலை வீரனுக்கு அவரது தந்தை வெளிநாட்டிலிருந்து எழுதிய கடிதமே இது. தமிழீழத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தந்தையும் எவ்வித உணர்வில் வாழ்கின்றார்களென்பதை இக்கடிதம் காட்டுகின்றது. பெயர்களையும், அவரிருக்கும் நாட்டையும் மட்டும் தவிர்த்துவிட்டு கடிதத்தை முழுமையாக இங்கு பிரசுரிக்கின்றோம்.

அன்புள்ள ......

உனது மனதில், காதில் சதா ஒலிக்கும் சொற்கள், தமிழ் இன விடுதலை. வர்க்க விடுதலை ஆகியவை தானே! இதில் இனவிடுதலை எனக்கு தெரிந்த சொல் ஆனல் அந்த வர்க்க விடுதலை என்பது புதிய சொல் வர்க்கப் போராட்டம் பற்றி கேள்விப் பட்டிருக்கின்றேன் வர்க்க விடுதலை பற்றி கேள்விப்படவில்லை. இதை ஏன் எழுதுகிறேன் என்றல் நீ சோசலிசம் பற்றி படிக்கும் போதே நல்ல பதங்களை உபயோகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பற்றி எனக்கு அவ்வளவாய் தெரியாது உங்கள் கழகம் பிரச்சாரப் பகுதி ஏதாவது சஞ்சிகை அல்லது புத்தகம் வெளியிட்டிருந்தால் அவை பெறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டுமென்று சொன்னல் நான் அதன்படி செய்து அவற்றை வாசித்து உங்கள் கொள்கைபற்றி அறியலாம்.

இலங்கையில் இனவாதம் தலை தூக்கியிராவிட்டால், முழு நாட்டிற்குமான புரட்சி பற்றியே எல்லா புரட்சிவாதிகளும் சிந்தித்திருப்பார்கள், துரதிஷ்டவசமாக அப்படி ஒரு புரட்சி ஏற்படும் சாத்தியங்களை இனவாதம் தடுத்து விட்டது வர்க்கப் போராட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய தமிழ் முற்போக்குவாதிகள் இப்போது இனவிடுதலைக்கு முதலிடம் கொடுக்கிருர்கள். இதற்கு முக்கிய காரணி ஆளும் வர்க்கம் தாங்கள் பதவிக்கு வருவதற்கு தொடர்ச்சியாக இனவாதத்தை ஒரு கருவியாக உபயோகித்து வந்தமையே (புத்த பிக்குகளை மறக்க முடியாது)

பழைய கதைகள் எமக்கு இப்போ தேவையில்லை. இன்றைய சூழ்நிலையில், தமிழ் இன விடுதலைதான் முதல் இடம் வகிக்கின்றது. இதைக் கூட ''ஈழவிடுதலை'' ''தமிழ் ஈழ விடுதலை'' என்று சிலர் இரண்டாக் பிரிக்கிருர்கள். அந்தப் பதங்களே தெளிவில்லாமல் இருக்கின்றன. இதைவிட தமிழ் இனவிடுதலை பற்றிப் பேசும் இயக்கங்களை காட்டிக் கொடுக்கும் வேலையில் சிலர் ஈடுபட்டதால் திருமலையில் பலவாலிபர்கள் கைதாகியதாக சொல்லி திருமலையைச் சேர்ந்த ஒருவர் கவலைப் பட்டார். இவையெல்லாம் நல்ல சகுனங்களாகப் படவில்லை. இவற்றைப் பார்க்கும் போது விடுதலை இயக்கங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டணியாக மாறுவது சாத்தியமில்லைப் போல் தெரிகிறது. கூட்டணி ஏற்படும் சாத்தியமில்லா விட்டால் ஒரு இயக்கம் மற்றெல்லா இயக்கங்களையும் விட வேகமாக வளர்ந்து தனித்து நின்றே போராடக்கூடிய சக்தியாக மாறவேண்டும்.

......க்கு எனது சுகம் சொல்லவும் உனது அம்மா பற்றி நீ கவலைப்பட வேண்டாம் அவர் நல்ல சுகமாகவே உ[illegible]ளார். உன்னைப்பற்றித்தான் ஒவ்வொரு கடிதத்திலும் எழுதுவது

வீட்டுக்குள்ளேயே சுற்றி மட்டும்தான் பழக்கப்பட்டது. [illegible] விட தாய் [illegible] பிள்ளையிடம் [illegible] மறக்க முடியுமா? நீ [illegible] தாய் மண்ணை காக்கப் [illegible] [illegible] தான் உன் இலட்சியத்திற்காக அவற்றை விட்டுப் [illegible] வெற்றியடையவேண்டும். வேறென்ன [illegible] ஏற்படும் போது [illegible] எழுதும் போது இயக்கத்திற்கு நான் ஏதாவது பண உதவி செய்யவேண்டுமென்று விரும்பினால் அறிவிக்கவும் [illegible] உனது ஆற்றல் பல துறைகளில் வளர்ந்து சிறந்த போராளியாக மாறவேண்டுமென்பதே என் விருப்பம்.

உனது
அப்பா

www.tamilarangam.net



# விடுதலைப் போராட்டத்தில் மக்களின் பங்கு என்ன?

(தொடர்ச்சி)

## யுத்த களத்திற்கு போகு முன்

உன்னைப் பற்றி முழுமையாகவும், உன் எதிரியைப் பற்றி முழுமையாகவும் அறிந்து நீ யுத்த களத்திற்கு செல்வாயானல் நடக்கவிருக்கும் நூறு யுத்தங்களின் விளைவைப் பற்றி கவலைப்படாதே. நீ உன்னைப் பற்றி மட்டும் அறிவாய் எதிரியைப் பறறித் தெரியாது என்ற நிலையில் யுத்த களத்திற்கு செல்வாயானல் நீ அடையும் ஒவ்வொரு வெற்றுக்கும் ஒரு தோல்வி நிச்சயம் உண்டு நீ உன்னைப்பற்றி அறியாமலும் எதிரியைப்பற்றி அறியாமலும் யுத்த நடவடிக்கையில் ஈடுபடுவாயானல் நீ தொடுக்கும் நூறு யுத்தத்திலும் நீ நிச்சயம் தோல்வி அடைவாய்.

"மாவோ"

என்ன செய்யவேண்டும் என்பதை மக்கள் அறிந்த இருப்பார்களாயின் அச் செயலை செய்வதற்கு பல நூறு வழிகளை கண்டுபிடிக்க பல காலம் ஆகாது என்பதை நாம் வியட்நாமிய நாட்டு மக்களின் செயல்களை ஆதாரமாக காட்டி விளக்கிேனும். மக்கள் போராடும் ஆயுதமேந்திய விடுதலை போராளிகளுக்கு எவ்வாறு செவிகளாக இயங்க முடியும் என்பதை இங்கே குறிப்பிடப்படும் சம்பவம் காட்டுகிறது.

எமது மக்கள் எதிரியின் ஒவ்வொரு அசைவுகளையும் எதிரியின் உரையாடல்களையும் உன்னிப்பாக அவதானித்தல் எதிரியின் எதிர்கால நடவடிக்கைகளை பற்றிய அவதானிக்க கூடியதாக இருக்கும்.

எதிரிகள் என்று நாம் கூறும் பொழுது நாம் யாரை குறிப்பிடுகிறோம் என்று நாம் விளங்கிக் கொள்ளவேண்டும். எமது தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களும் அவர்களது அத்தகைய நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்பவர்களும் அத்தகைய நடவடிக்களிஞல் பயன் அடைபவர்களும் ஆவர். அவ்வாறு பார்க்கையில் எதிரியும் அவர்களைச்சார்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமில்லாமல் பலவாறு பிரிந்து பல பகுதிகளில் பல வகையான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு உள்ளார்கள் என்பதை நாம் முதலில் உணர வேண்டும் நாம எதிரியின் எதிர்கால நடவடிக்கைகளை அறிய ராணுவச் சீருடையில் இருக்கும் எதிரியின் நடவடிசகைகளை மட்டும் கவனித்தால் மட்டும் போதாது சில சமயங்களில் ராணுவ வீரனின் குடும்பத்தினர்களின் நடவடிக்கைகளை அவதானிப்பதால் மிகச் சிறந்த செய்திகளை பெற முடியும் என்பதை இரண்டாவது உலக மகா யுத்த சமயம் பிரான்சு நாட்டில் அந்த நாட்டு விடுதலை போராளிகளின் மூன்று நபர்களை மட்டுமே உள்ளடக்கிய சிறு குழுவானது ஆயிரத்திற்கும் அதிகமான ஜெர்மானிய துருப்புகளை அழித்தொழித்தசெயல் ஒரு சிறந்த எடுத்துகாட்டாக அமையும். இந்த செயலானது ஒரு ஜெர்மனிய ராணுவ அதிகாரியின் மனைவி தனது தோழிக்கு தனது கணவன் அவரது வீட்டு விருந்துக்கு வரமுடியாத காரணத்தை விளக்க முற்பட்டு அது அவரது கணவனது படைப்பிரிவு எந்த நேரத்தில் எந்த ஊரில் இருந்து என்ன வாகனததில் வெளியேறுகிருர் என்பது வரைக்கும் விளக்கியதை கேட்ட நாட்டுப் பற்று மிக்க பிரஞ்சு பெண்மணியானவள் தான் கேட்ட செய்தியானது விடுதலைப் போராளிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய செய்தி என்ற கடமையை உணர்ந்து பலவித இன்னல்களுக்கும் இடையில் விடுதலைப் போராளிகளுடன் தொடர்பு கொண்டு செய்தியை தெரிவித்தபடியால்தான் விடுதலைப் போராளிகள் அந்த எதிரிகள் செல்லும் பாதையில் உள்ள பாலத்தை அவர்கள் சென்ற ரயில் வண்டி கடக்கும் பொழுது வெடி வைத்து தகர்த்து அழிக்க முடிந்தது.

அதே போல் தொடர்ந்து எதிரியைப் பற்றி குறிப்புகள் எடுக்கப்பட்டால் குறிப்பிட்ட படைப்பிரிவு எங்குள்ளது என்பதை அறிய அந்த குறிப்பிட்டபடைப்பிரிவைச்சார்ந்த ராணுவ வீரருடைய மனைவி காய்கறிகக்டையில் வழக்கத்துக்குமாருக கொள்முதல் செய்வதைக் கொண்டு கூட அறியத்தக்கதாக இருக்கும். அதே போல் எதிரி முகாம்களுக்கு செல்லும் உணவுப் பொருட்கள் அவர்களின் எண்ணிக்கையை தெரியப்படுத்துவதாக இருக்கும். எதிரிகளின் கதையை உன்னிப்பாக கேட்ட அவர்களது எதிாகால நடவடிக்கைகளை அறிய தக்கதாக இருக்கும். எனவே எமது தமிழீழ மக்கள் அவர்கள் எதிரியைப் பற்றி அறியும் எந்த ஒரு தகவல்களும் விடுதலைப் போராட்டத்திற்கு உதவும் என்ற ஒரு தலையாய உண்மையை உணர்ந்து அத்தகைய செய்திகளை விடுதலை போராளிகளுக்கு தெரிவிப்பது தங்களது கடமைராகக் கொள்ளவேண்டும்.

(தொடரும்)

★

---

அதை தடுக்க முடியாது காரணம் அவ சிந்தனை புருசன், பிள்ளைகள் என்ற சிறு வட்டத்துக்குள்ளேயே சுற்ற மட்டும்தான் பழக்கப்பட்டது அதைவிட தாய்க்கு பிள்ளையின் மேல் உள்ள பாசம் இலகுவில் மாற்றக் கூடியதா? நீகூட தாய்ப்பாசத்தை தூக்கி எறிய முடியாது. ஆனல் உன் இலட்சியத்திற்காக அவற்றைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். வேறென்ன? வசதி ஏற்படும் போது கடிதம் போடவும். இயக்கத்திற்கு நான் ஏதாவது பண உதவி செய்ய வேண்டுமென்று நீ விரும்பினல் அறிவிக்கவும், சஞ்சிகைகளையும் மறக்க வேண்டாம் உனது ஆற்றலை பலதுறைகளிலும் வளர்த்து சிறந்த போராளியாக மாறவேண்டும் என்பதே என் விருப்பம்.

உனது
அப்பா

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செல்வாக்கிழந்த கூட்டணியை முறியடிக்க வன்முறை அவசியமா ?

ஆடி 25, 1984ல் யாழ்ப்பாணம் வீரமாகாளி அம்மன் கோயில் முன்றலில் கூட்டணி உண்ணாவிரதத்தை ஒழுங்கு செய்தது.

கடந்த வருடம் சிறிலங்கா அரசினால் நடத்தப்பட்ட இனப் படுகொலையை கண்டித்தே இந்த உண்ணாவிரதம் ஏற்பாடு செய்யப்பட்டது. தமிழர் விடுதலை கூட்டணி உண்ணாவிரதத்தை ஆரம்பித்ததும் விடுதலை இபக்கங்கள் சில உண்ணாவிரதிகளை சூழ்ந்து கொண்டார்கள்.

சிறுவர்களை ஏவிவிட்டு உண்ணாவிரதிகளை நையாண்டி செய்தார்கள். விடுதலை இயக்கங்களின் அரசியல் போதனாசிரியர்கள் உண்ணாவிரதிகளிடம் கேள்விக்கனை தொடுத்தார்கள். சிலர் உணவு கொண்டுவந்து சாப்பிடும்படி வற்புறுத்தினார்கள். நேரம் செல்ல செல்ல கூப்பாடும் கூக்குரலும் அதிகரித்து உண்ணாவிரதிகளை தூசன வார்த்தைகளால் ஏசினார்கள். கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தை பலாத்காரமாக தூக்கிச் சென்று காரில் ஏற்றினார்கள், அத்துடன் உண்ணாவிரதம் குழப்பப்பட்டு அமர்க்களம் அடங்கி அந்த இடம் அமைதியாகிற்று,

இது எதைக் காட்டுகின்றது?

தமிழ் மக்கள் மத்தியில் கூட்டணி செல்வாக்கிழந்து விட்டதென்பதையல்லவா? தமிழ் மக்களின் அடுத்தடுத்த அரசியல் வரலாறுகள் இனிமேல் இப்படி அராஜகம் நிறைந்ததாகத்தான் இருக்கப்போகின்றதா என்பதே முக்கிய கேள்வி.

இவ்வளவு நாடகமும் நடந்து முடியும் வரைக்கும் யாழ் நகரில் வட்டமிடும் பொலிஸ் அதிரடிப் படைப்பிரிவோ அல்லது இராணுவமோ அந்த இடத்தில் எட்டியும் பார்க்கவில்லை. தமிழ் மக்கள் தங்களுக்குள் அடிபட்டு அழிவதையே அவர்கள் எதிர்பார்ப்பதை இது காட்டுகிறது.

கூட்டணி தமிழீழப் போராட்டத்தை இதய சுத்தியுடன் முன்னெடுக்கவில்லை. அது மிக மோசமான துரோகத்தை மக்களுக்கு செய்திருக்கின்றதென்பதை நாம் மறுக்கவில்லை. கூட்டணியை கண்டிக்க, விமர்சிக்க எல்லோருக்கும் உரிமை உண்டு. கூட்டணியை மட்டுமன்றி, எல்லா இயக்கங்களையும் விமர்சிக்கவும், கண்டிக்கவும் உரிமை உண்டு. வேண்டியளவு கண்டியுங்கள், விரும்பிய வகையில் விமர்சியுங்கள்,

ஆனால்!

எந்த தாபனத்தின் அரசியல் நடவடிக்கைகளையும் வன்முறையைப் பாவித்து தடுப்பதற்கு உங்களுக்கு உரிமையில்லை. அவர்கள் போராட்டங்களில் (அகிம்சையோ அல்லது ஆயுதமோ) தலையிட்டு அராஜகமாகக் குழப்புவதற்கு உரிமையில்லை.

கூட்டணியின் கொள்கை, நடைமுறைகளில் உள்ள குளறுபடிகளை நாம் எதிர்க்கின்றோம். இதுபற்றி மக்களிடம் விமர்சிக்கின்றோம், கண்டிக்கின்றோம்.

தமிழர் விடுதலைக்கூட்டணி தனது முதலாளித்துவ உறவு முறைகளிலிருந்து மாறவில்லையானாலும் இன்றைய கட்டத்தில் அது வெளிப்படையாக நமது பொது எதிரிக்கு எதிராகவே சத்தியாக்கிரகம் செய்தது என்பதை மறுப்பதற்கில்லை.

அதற்காக!

கூட்டணியின் போராட்டங்களான உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம், பாதயாத்திரை, தியானம், காவடி எடுத்தல் எதனையும் நாம் தடுக்கவில்லை. யதேச்சாதிகாரமாக ஒரு தாபனத்தின் நடவடிக்கைகளை தடுத்தோ, குழப்பியோ நிறுத்துவதன் மூலம் மக்களை சரியான பாதையில் திசை திருப்ப முடியாது,

எமது சரியான நடவடிக்கைகள் மூலமே மக்களை அணிதிரட்ட முடியும் என்பதே எமது நிலைபாடு. தனது பித்தலாட்ட அரசியலால் பொது மக்களிடையே செல்வாக்கிழந்து செல்லாக்காசாகிவிட்ட கூட்டணியை முறியடிக்க வன்முறைகளே தேவையில்லை இந்த உண்ணாவிரதத்தின் மூலம் கூட்டணி மக்களால் முற்றாகவே நிராகரிக்கப்பட்டுவிட்டது.

நாம் மக்களை நம்புகின்றோம். அவர்களே மகத்தான சக்திகள். மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே பிற்போக்கு சக்திகளை அம்பலப்படுத்த முடியும். அதைவிடுத்து தெருச் சண்டியன் பாணியில் ஒரு தாபன நடவடிக்கைகளை குழப்புவது சுத்த ரௌடித்தனமே. இந்த நடவடிக்கைகளுக்காக எமது கண்டனத்தை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த விடுதலை தாபனங்களின் உண்ணாவிரத குழப்பல் நடவடிக்கைகள் சிறிலங்கா அரசை நிட்சயம் மகிழ்வித்திருக்கும். அதனால் தான் இந்த அடாவடித்தனங்களும், அட்டகாசங்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நன்றாக ஊடுருவட்டும் என்று, இராணுவத்தை அனுப்பாமல் விட்டு வைத்திருக்கிறார்கள்.

1956ல் காலிமுகத்திடலில் நடந்த உண்ணாவிரதமும் இப்படித்தான் சிங்கள காடையர்களால் ஒடுக்கப்பட்டது. அப்பொழுது தமிழ்மக்கள் இரத்தக் கண்ணீர் வடித்தார்கள். சனநாயக போராட்டங்களை மதியாத சிங்கள காடையரின் நீசத்தனமான செயல் என்று சபித்தார்கள்.

அதே செயலை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களும் செய்வதால் மக்களிடமிருந்து தனிமைப்படுவதுமட்டுமல்ல. மக்களின் நம்பிக்கையையும் இழக்கவேண்டிவரும் அதனால் ஊனமடையப்போவது "விடுதலை" என்று எச்சரிக்கும் நாம் எதிர்காலத்தில் இவ்விதநடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 2500 வருட பாரம்பரியமும் — பாராளுமன்ற அரசியலும்

இன்றைய முக்கிய அரசியல்கட்சிகள் அதாவது பாராளுமன்ற அரசியலில் -சிங்கள பௌத்த தனித்துவம் என்ற அடிப்படையை மீறி ஆளும் கட்சிகளாவது கலப்பமான காரியமில்லை. இந்நிலையில் சிங்கள சமூக உணர்வின் தலையாய அம்சமாக ஓர் வெறி மிகுந்த தனித்துவம் அரசோச்சும் வரை வர்க்கப் போராட்டம் மழுங்கடிக்கப் படவே செய்யும் இன்றைய இலங்கை அரசியலில் பாட்டாளி வர்க்க இயக்கங்களின் வீழ்ச்சியின் ஓர் முக்கிய காரணம் வர்க்க உணர்வுகளை மழுங்கடிக்கும் இனவாதத்தின் ஆதிக்கமே. இந்த ஆதிக்கம் வெறும் மேடைப் பேச்சு மட்டத்தில் மட்டுமல்ல-இளம் சந்ததிகளின் அன்றாட சமூக வாழ்வில் அவர்களின் சமூக நோக்கில் அவர்களின் தம்மைப் பற்றிய மற்றைய இனத்தவர் பற்றிய, கணிப்பீடுகளில் எல்லாம் பரந்த முற்போக்கான வர்க்கப் பார்வைக்கு இடமில்லாத வகையில் இனவாதக் கருத்துக்களே மேலாதிக்கம் செய்கின்றன.

இந்த மேலாதிக்கத்தை ஓர் இயற்கை நிலைமையாக ஏற்றுக் கொண்டு சில மனிதாபிமான இயக்கங்கள் வேலை செய்கின்றன. இதனால் மறைமுகமாக இவை இந்த மேலாதிக்கத்தை மேலும் ஸ்திரப்படுத்துகின்றன மற்றைய நாடுகளில் 'சர்வோதயம்' போதித்துப் பரிசுபெறும் 'மக்கள் மட்ட' சிந்தனையாளர்களும் இலங்கைக்குள் இந்த மேலாதிக்கத்துக்குக் கட்டுப்பட்டவர்களே.

1983ன் கொடுமைகளுக்குப் பின் ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தன நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள், தத்துவம் பற்றியதும் நாகரீகம் பற்றியதுமான ஓர் பிரச்சனை என்ற ''மாபெரும்'' கருத்தினை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதி அவர்களே தனது கருத்தினைச் சற்று ஆழமாக அலசிப்பார்த்தல் அவசியம்.

நாகரீகத்தையும், அநாகரீகத்தையும் தோற்றுவிப்பவர்கள் மனிதர்களே. ஜனாதிபதி பெருமைப்படும் 2500 வருடகால சிங்கள பௌத்த நாகரீகம் ஏன் ஒருவருடைய தலைமையின் கீழ் இப்படி ஆகிவிட்டது? தமிழர்கள் மீது கொடுமைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட உச்சக்கட்டத்தில் ஜனாதிபதி அவர்களே 'சிங்கள மக்களின் இயற்கையான ஆவலைத் திருப்திப்படுத்த' ஆறாவது யாப்பியல் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டி இருந்தது. இயற்கையான ஆவல் விருப்பம் என்றால் என்ன? அத்தகைய ஆவல்கள் விருப்பங்கள் சிங்களவர்களுக்கு மட்டும் தானா உண்டு? 77 வயதினரான மிகவும் படித்த ஜனாதிபதி அவர்கள் சிங்கள மக்களைத் திருப்திப் படுத்த விழைந்தாரே ஒழிய இம்சைக்குள்ளான தமிழர்களுக்காக ஒரு அனுதாப வார்த்தையைக் கூட வெளியிடவில்லை. 2500 வருடங்கள் மட்டுமல்ல, பல்லாயிரம் வருடங்கள் நீண்ட மனித நாகரீகத்தின் அடிப்படை அலகான மனிதாபிமானமும் ஏன் ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கே வரவில்லை? கருணையில் உருவான புத்தபகவானே நேரில் வந்து ஆசீர்வதித்தவர்களாகக் கருதப்படும் இலங்கை சிங்கள பௌத்தர்களின் தலைவர் நடந்து கொண்ட விதம் அவர் எழுப்பியுள்ள அதேகேள்விக்கு நம்மை மீண்டும் கொண்டு செல்லவில்லையா?

ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் இனவாதியா இல்லையா என்பதல்ல முக்கியம், அவருடைய அரசியல் அவருடைய தலைமையில் உள்ள கட்சியின் அரசியல் என்பனவே முக்கியம். அப்படிப்பார்க்கும்போது ஜனாதிபதியும் அவருடைய அகங்காரம் கொண்ட மந்திரிகளும் அவர் குறிப்பிட்ட நாகரீகம் பற்றிய பிரச்சனையின் அங்கங்களே யொழியத் தீர்வின் பக்கத்தினர் அல்ல.

சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் இத்தகைய பரவலான ஆழமான ஸ்தாபனமாக்கல் குட்டி பூர்ஷ்வா அரசியலின் பொப்பியூலிஸ்ட் தன்மையினையும் தெளிவாகக் காட்டியது. அநாகரிக தர்மபாலா முதல் பண்டாரநாயக்கா வரை 'மக்கள் மட்டத்திற்கு' ஜனரஞ்சகப் படுத்தப்பட்ட யு. என். பியின் தலைவர்கள் வரை பழையதொரு சிங்கள பௌத்த பொற்காலம் பற்றிய பின்னோக்கிய கற்பனவாத மேடைப் பிரச்சாரத்துக்கு நன்கு உதவியது. ஆனால் இத்தகைய குட்டி பூர்ஷ்வாக் கருத்தமைவு ஜயவர்த்தனவின் பொருளாதாரக் கொள்கைக்கும் அது சார்ந்து நிற்கும் பூர்ஷ்வா வர்க்கத்தின் நலன்களுக்கும் உண்மையில் ஒத்துவராதது. இந்த முரண்பாடு ஒருபுறம் இலங்கையின் பாராளுமன்ற அரசியலுக்கு அவசியமான ஜனரஞ்சக சந்தர்ப்ப வாதத்திற்கும், மறுபுறம் மூலதனக் குவியலுக்கும், வளர்ச்சியின் தேவைக்குமிடையிலான முரண்பாடெனக் கூறினால் அது மிகையாகாது.

### சோரம்போன கூட்டம் ஒன்று

இங்கிலாந்து போன்ற நாடுகளின் எடுத்துக்காட்டை நினைவில் கொள்ளுங்கள். அங்கு முதலாளிவர்க்கத்திற்கு எதிராக பாட்டாளிவர்க்கம் நடத்தும் போராட்டம் எல்லா இடங்களிலும் தொடர்ந்து நடந்துக்கொண்டே இருக்கிறது. ஆயினும் பாட்டாளிவர்க்கம் ஒன்றுபடாமல் கிடக்கிறது. அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முதலாளிவர்க்கத்தால் விலைக்கு வாங்கப்பட்டுள்ளனர். அதன் வர்க்க உணர்வு மூலதனத்தின் சித்தாந்தவாதிகளால் களங்கப்பட்டுள்ளது, உழைக்கும் வர்க்கத்துக்குள்ளே இருக்கும் ஒரு சலுகை பெற்ற பிரிவு ஒன்று அதன் அணிகளைக் கைவிட்டு ஓடுவதன் காரணமாக பாட்டாளிவர்க்கத்தின் வலிமை சிதறடிக்கப்படுகிறது.

—லெனின்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ★ சிங்கள இனவாதமும் கலாச்சார அமைப்புகளும் ★

1956 லிருந்து இன்றுவரையிலான வரலாற்றில் சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் மிகவும் ஒழுங்கான, தொடர்ச்சியான வளர்ச்சியைக் கலாச்சாரத் துறைகளிலே காணலாம். சிங்களம் அரசகரும மொழியானதைத் தொடர்ந்து சிங்கள, தமிழ் மொழிகள் பாடசாலைகளில் போதனை மொழிகள் ஆயின. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் புகுமுகம் வரை பாடப்புத்தகங்கள் சுயமொழிகளில் ஆக்கப்படும் பணியினைக் கல்வி அமைச்சு மேற்கொண்டது. பாடநூல்களில் வகுப்பு வாதம் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் சமீப காலத்தில் நடைபெற்றுள்ளன. இவை முன்பிருந்தே பொதுவாக நம்பப்பட்ட பல உண்மைகளை மிகவும் ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளன. இது தொடர்பான ஓர் அறிக்கையையும் சில கட்டுரைகளையும் ஓர் குறிப்பிட்ட ஆய்வுக் குழுவின் தலைவரான றெஜி சிறிவர்த்தன வெளியிட்டுள்ளார்.

இந்த ஆய்வுகளின்படி சிங்களக் குழந்தைகள் தொடர்ச்சியான ஓர் சிங்கள இனவாதச் சிந்தனை மாற்றத்திற்கு ஆளாகிறார்கள். சிங்கள பௌத்த வாதத்தின் ஆரியவாதம் ஊட்டப்பட்டு அடிப்படையிலான வரலாற்று வியாக்கியானமும் சமூகக் கல்வியும் இளம் தலைமுறைக்கு ஊட்டப்பட்டு வருகின்றது. அதே நேரத்தில் தமிழ்ப் பாடநூல்களில் தேசிய ஒருமைப்பாடு பற்றி அழுத்திக் கூறப்படுகிறது. றெஜி சிறிவர்த்தனவின் ஆய்வுக் குழு இப்படிக் கூறியுள்ளது.

"தமிழ்ப் புத்தகங்கள் தமிழரல்லாத, இந்துக்கள் அல்லாத மொழி மதப் பிரிவுகளின் வாழ்முறை, கலாச்சாரம் பற்றிய விளக்கத்தையும், அதன்மீது மதிப்பினையும் ஏற்படுத்த விழைகின்றன. அவை ஒரு பொது தேசிய ஒருமைப் பாட்டுணர்வை முன்வைக்கின்றன. சிங்கள நூல்கள் பிரத்தியேகமாக ஒற்றைக் கலாச்சார (monocultural) உள்ளடக்கத்தையே கொண்டுள்ளன. அதாவது அவை முழுக்க முழுக்க சிங்களவரினதும் பௌத்தர்களினதும் வாழ்க்கை முறையையே காட்டுகின்றன. மற்றைய சமூகங்களின் வாழ்முறை கலாச்சாரம் பற்றிய விளக்கத்தையும் அனுதாபத்தையும் வளர்க்க அவற்றில் முயற்சி எடுக்கப்படாதது மட்டுமின்றி இந்த நூல்களில் தமிழர்கள் மரபுரீதியான எதிரியாகவே இனம் காட்டப்பட்டுள்ளனர்."

புதிதாக எழுதப்பட்டுள்ள பாடநூல்களிலும் இதே தன்மை தொடர்வதையும் றெஜி சிறிவர்த்தன சுட்டிக் காட்டியுள்ளார். ஒரு சிங்கள நூலில் தீபாவளி பற்றி ஒரு பாடம் இடம் பெற்றுள்ளது. இது பற்றி சிறிவர்த்தன பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"ஒரு புத்தகத்தில் தீபாவளி பற்றி ஒரு பாடம் இருக்கிறது. முதற் பார்வையில் இது தமிழ் இந்துக் கலாச்சாரத்தைச் சிங்களக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யும் ஓர் வரவேற்கக்கூடிய புதுஉத்தி என்றே படுகிறது. ஆயினும் இந்தப் பாடத்தை வாசிக்கும்போது இதிலிருக்கும் ஒரு விடயத்தினால் இந்த நோக்கம் திசை திருப்பப்படுகிறது. தீபாவளி இந்தியாவிலிருந்து வந்த தமிழர்களின் சந்ததியினரான இலங்கையில் வாழும் மக்களால் கொண்டாடப்படுவது என்றே குறிப்பிடப்படுகிறது. இந்த வசனத்தில் ஒரே அடியில் தமிழர்கள் இந்த நாட்டைச் சேராத அந்நியர்கள் என்று சிங்களக் குழந்தைக்கு அறிமுகப் படுத்தப்படுகின்றனர்."

சிங்களப் பாடநூல்களின் இந்த ஒற்றைக் கலாச்சார இனவாதம் சார்ந்த போக்கின் விளைவுகளை மேலும் உரப்படுத்துபவையாக மற்றைய கலாச்சாரச் சாதனங்கள் அமைந்துள்ளன. 1956க்குப் பின் சிங்களக் கலை இலக்கியத்துக்கு விசேஷ ஊக்குவிப்பு வழங்கப்படுகிறது. இதன் ஓர் நல்ல அம்சம் சிங்கள நாடகம், இசை, நடனம் போன்றவை நன்கு வளர்ந்துள்ளன. சிங்கள அரங்கியலின் வளர்ச்சி குறிப்பாக உத்திகள், தமிழ் அரங்கியல் வளர்ச்சிக்கும் உதவியுள்ளது என்பதும் உண்மை.

அதே நேரத்தில் இந்தச் சிங்களக் கலை இலக்கிய வளர்ச்சியின் முதலாய செல்வாக்கு மிகுந்த போக்கு சிங்கள பௌத்த இனவாதத்தின் கருவியாகவே அமைந்துள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் பல ஜனரஞ்சகப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இனவாதப் பிரச்சாரச் சாதனங்களாக இயங்குகின்றன. இந்தப் பிரச்சாரத்தில் ஆரிய சிங்கள பௌத்தத்தின் தனித்துவப் பெருமை மட்டும் கூறப்படவில்லை. தமிழர், இந்தியர் விரோத உணர்வுகளும் வளர்க்கப்படுகின்றன. பிரபல சிங்களப் பாடகி நந்தாமாலினி, பல ஆண்டுகளுக்கு முன்பு மிகவும் நன்றாகப் பாடியுள்ள "இது எங்கள் சிங்கள நாடு" என்ற பாடல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் தினமும் ஒலிபரப்பப்பட்டு ஜனரஞ்சகப் படுத்தப்பட்டுள்ளது. இதே நந்தாமாலினி 1977ம் ஆண்டுக்குப் பின் சிங்கள இளைஞர்களுக்குச் சிங்கத்தின் வீரத்தை நினைவூட்டும் இனவாதப் பாடல்களைப் பாடியுள்ளார். நந்தாமாலினி ஒரு உதாரணம் மட்டுமே. அவர் போன்று பலர் உள்ளார்கள்.

இன்றைய சிங்கள நாடகங்களில் தமிழர் நாட்டைப் பிளக்க முயலும் துரோகிகள் என்ற கருத்தும் ஆங்காங்கே வெளிப்படுகின்றன. இடது சாரிகள் முற்போக்காளர் என்று பிரபல்யமான சில இளம் கலைஞர்கள் கூட இத்தகைய பிரச்சாரங்களில் ஈடுபடுதல் வருந்தத்தக்கது. அதுமட்டுமல்ல நாடகங்களில் சிரிப்புக்கிடமான கோமாளிப் பாத்திரங்களைத் தமிழர்களாக்கும் ஓர் மலிந்த உத்தியையும் பலர் கையாளுகிறார்கள். இன்றைய சூழ்நிலைகளில் இந்தச் செயல் இனவெறுப்புக்கு மேலும் உதவுவதாகவே இருக்கிறது. ஏற்கனவே மற்றைய பிரச்சார சாதனங்களால் ஆழ்ந்த இனவாத உளவியலைக் கொண்டுள்ள இரசிகர்களின் கீழ் மட்ட ரசனைக்குத் தீனி போட்டுப்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமெரிக்க சுரண்டலும் தமிழீழப்போராட்டமும்

மூன்றாம் உலக நாடுகளுக்கு அமெரிக்கா அளித்து வரும் பொருளாதார உதவிகள் குறைந்து கொண்டு வருவது பற்றி பற்பல சர்ச்சைகளும் கலந்துரையாடல்களும் நடைபெற்று வருவது தெரிந்ததே.

ஆயினும் இன்னொரு முக்கியமான நிகழ்வும் மூன்றாம் உலகில் நடைபெற்று வருவது நம் கவனத்துக்குரியது. எதிர்த் திசையில் பாய்ந்தோடும் டாலர் மூலதனத்தையே இங்கு குறிப்பிடுகிறோம். அதாவது அமெரிக்காவின் பொருளாதாரத்துக்கு உதவுவதற்கென, மூன்றாம் உலக நாடுகளின்றும் பெருந்தொகையான டாலர்கள் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுவதாலேயே இன்று அமெரிக்கா பொருளாதார ரீதியில் சரிந்து விடாமல் நிற்கின்றது. இதனை ஓரளவு விரிவாக நோக்குவோம்.

அமெரிக்க நிர்வாகம், 40 ஆண்டுகளுக்கு மேலாக நிதிப் பற்றாக்குறை அமைப்பையே கொண்டிருந்தது. சென்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, நிதிப்பற்றாக்குறையைக் குறைத்துப் பிரச்சினையைப் படிப்படியாக கத்திரிப்பதே தனது லட்சியம் எனத் தேர்தல் பிரசாரம் செய்தார் ரீகன். ஆனால் நடந்தது என்ன? ரீகனின் காலத்தில் பற்றாக்குறை அதிகரித்தது.

மறுபக்கத்தில் எழுபதுகளின் முற்பகுதியில் உலக நாடுகள் பலவற்றில் ஏறத்தாள 600 மில்லியன் (60,000 கோடி) டாலர்கள் மேல்மிச்சமாகத் திரண்டிருந்தன. இதனை வைத்திருந்தோர் திகிலடைந்து தங்கமாக மாற்ற முனைந்தனர். இந்நிலையில் அமெரிக்கா அதன் சேமிப்புக்கான வட்டியை 5½ சதவீதத்திலிருந்து 2½ சதவீதம் வரை உயர்த்தியது. இது பணம் வைத்திருந்தோரை அமெரிக்கா நோக்கி கவர்ந்திழுத்தது பல்தேசிய கார்ப்பரேஷன் (multi nationals) எண்ணைக் கம்பனிகள், தனியார் நிறுவனங்கள், ஏன் தனிப்பட்டோரும் கூட தமது பணத்தை அமெரிக்காவுக்கு சேமிப்பாக அனுப்பினர்.

அதே சமயத்தில், இக்காலக்கட்டத்தில் உலகின் பல பாகங்களிலும் ஸ்திரமான நிலைமை காணப்படவில்லை. வளர்ந்து வரும் பல நாடுகளில் உள்நாட்டின் அரசியல் நிலைமைகள் ஸ்திரமற்றவையாக காணப்பட்டன. ஆகவே பாதுகாப்புக் கருதி இந்நாடுகளின முதலாளிகளும் பணக்காரர்களும் தமது கறுப்புப் பணத்தை கறுப்பு வழிகளில் அமெரிக்காவுக்கு அனுப்பினர். இதனால் டாலரின் தேவை அதிகரித்தது, அதன் மதிப்பும் உயர்ந்தது.

இந்நிகழ்வினை லண்டன் எக்கனோமிக்ஸ் பத்திரிகை

---

புகழும் பணமும் தேடும் குறுக்கு வழியைப் பல சிங்களக் கலைஞர்கள் பின்பற்றுகிறார்கள். அரச உடைமைகளான தொடர்பு சாதனங்களை இவர்கள் நன்கு பயன்படுத்துகிறார்கள். கலைஞர்களின் இந்தக் குறுக்கு வழிப்போக்கு அரசியல்வாதிகளின் போக்கிலிருந்து வேறுபட்டதல்ல.

1960களில் இலங்கை பல்கலைக் கழகங்களில் சிங்கள, தமிழ் மாணவர் மத்தியில் நட்புறவே குரோத உணர்வையும் விட மிஞ்சியிருந்தது. இன்று அதே வளாகங்களில் பல சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களையும் ஆசிரியர்களையும் தாக்கி அவமதிப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள். இந்த மாற்றம் கலாச்சார சாதனங்களுக்கூடான பிரச்சாரத்தின் ஓர் நேரடி விளைவு என்றே சொல்லவேண்டும். பாலர் வகுப்பிலிருந்து பூச்சி புழுக்களையே கொல்வது பாவம் என்ற புத்த போதனையைப் பெறும் அதே நேரத்தில் 'இனம்—மதம்—நாடு' என்ற புனிதத்துவமான மூன்று ஐக்கியத்தினையும் பற்றிய போதனை தமிழர்களைத் தாக்குவதை, அவமதிப்பதை நியாயப்படுத்துவதாகவும் தூண்டுவதாகவும் இருக்கிறது. கொழும்பு மருத்துவ பீடச் சிங்கள மாணவர்கள் தம்முடன் ஒரே விடுதியில் வாழ்ந்த தமிழ் மாணவர்களை மோசமாகத் தாக்கி விரட்டிய சம்பவம் பல இலங்கையர்களைத் தலைகுனிய வைத்தது. இவர்கள்தான் எதிர்கால வைத்தியர்கள். உயிர் காக்கும் மனித தெய்வங்கள். அவர்களின் இந்த நடத்தையை நாம் அதன் அரசியல்—கலாச்சார—உளவியல் பின்னணியில் வைத்தே பார்க்கவேண்டும். அப்போது தான் மனிதர்களின் மிருகத்தனமான நடத்தையைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியும். 1983ன் வன்செயல்களில் கொழும்பில் 14—15 வயது சிங்கள இளைஞர்களும் பெருமளவில் ஈடுபட்டிருந்தனர் எனக் கூறப்படுகிறது. கொழும்பின் பிரபலமான பௌத்தப் பாடசாலையொன்றின் மாணவர்களின் காடைத்தனம் பற்றி மிகவும் விசனத்துடன் சிலர் பேசினார்கள். இந்த மாணவர்களின் நடத்தைக்கு உடனடிக் காரணம் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட 13 இராணுவ வீரர்களில் ஒருவர் அவர்களின் பாடசாலைப் பழைய மாணவர் என்ற செய்தி எனக் கூறப்படுகிறது. இப்படி அநாகரீகமாக, அவமானத்துக்குரிய முறையில் நடந்து கொள்ளும் ஓர் இனவாதம் மிகுந்த இளம் சந்ததி எப்படி உருவானது? இதை உருவாக்கிய சக்திகள் எவை? இன்று அவமானத்தால் தலைகுனியும் மனிதத்துவம் கொண்ட இலங்கையர்கள் இந்தக் கேள்விகளைக் கேட்க வேண்டும். அப்போதுதான் கடந்த 30 வருடங்களாகச் சிங்களப் பெற்றோர்களும், ஆசிரியர்களும் பெருமளவில் உடந்தையாயிருந்த கலாச்சார 'மறுமலர்ச்சி' பற்றி அவர்கள் மீள்பரிசீலனையைச் செய்ய முடியும்.

கல்வி கலாச்சார சாதனங்களுக்கூடாகப் புகுத்தப்படும் இனவாத உணர்வு சமூக மட்டத்தில் ஆழப் பதிந்து அரசியலின் உதவியுடன் ஒருவித சுயாதீன இயக்கப் பாட்டினைப் பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(1983-12-17) பின் வருமாறு விவரிக்கின்றது. ''குவாய்த்தில் குண்டொன்று வெடிக்கின்றது. டாலர் உயருகிறது. ஈரான்-ஈராக் யுத்தப் பீதியினுல் டாலர் உயருகிறது. ஆர்ஜென்ரீன மக்களும், பிலிப்பின் தேசத்தவர்களும் பணத்தைக் கடத்துகின்றனர். டாலரின் மதிப்பு ஏறுகின்றது. சென்ற இருவாரங்களாக இதுவே நடைபெறுகின்றது. இவ்வாறே ஆண்டுதோறும், குண்டு வீச்சு விமானங்களும், கள்ளக் கடத்தல் காரரும் டாலரின் விலையை உயர்த்துகின்றனர்.

ஆகவே 1980-1983 கால கட்டத்தில் ஒருபுறம் அமெரிக்கப் பொருளாதாரம் சீரழியும் நிலையில் காணப்பட்டது. அதன் நிதிப் பற்ருக்குறை ஏறிக் கொண்டே போனது, மறுபுறத்தில் ''சூடான'' பணம் அமெரிக்கா நாட்டை நோக்கிப் பெருக்கெடுத்தது!

1980 தொடக்கம் அடுத்த நான்கு ஆண்டுகளிலும் ஏறத்தாள 268 (26800 கோடி) மில்லியன் டாலர்கள் அமெரிக்காவை வந்தடைந்ததென ''நியூஸ்வீக்'' பத்திரிகை குறிப்பிட்டது. எனவே உலக மூலதனத்தின் பெரும் துண்டம் ஒன்றைதனக்கென அபகரித்துக் கொண்டது அமெரிக்கா.

உலகத்தின் மாபெரும் செல்வந்த நாடான அமெரிக்காவே உலகத்தின் மாபெரும் கடன்கார நாடாகவும் விளங்குகின்றது என ஒரு அமெரிக்க அதிகாரி அண்மையில் முதலைக் கண்ணீர் வடித்தாலும், அமெரிக்க ஏகாதிபத்தியம் எவ்வாறு உயிர் வாழ்கிறது என்பதை நாம் இங்கு காண முடிகின்றதல்லவா.

அமெரிக்கா பெருந்தொகையான ஆயுதங்களையும் போர்த்தளபாடங்களையும், உற்பத்தி செய்து குவிக்கின்றது. இதுவே அதன் நிதிப்பற்ருக் குறைக்கான காரணம், உலக ஜனநாயக நாடுகளை நிலைகுலையச் செய்வதற்கு, அமெரிக்க தரகு முதலாளிகளின் ஆட்சியில் உள்ள நாடுகளில் விடுதலைப் போராட்டங்களை நசுக்குவதற்கு, சோஷலிசத்தை எதிர்ப்பதற்கு, வளர்ந்துவரும் நாடுகளை வலுக்கட்டாயப் போரில் இழுப்பதற்கு, நாடுகளில் மதவாத இனவாதங்களை வளர்ப்பதற்கு, சதிவேலைகளுக்கு, அமெரிக்கா உற்பத்தி செய்யும் ஆயுதங்கள் தேவைப்படுகின்றன.

இவ்வாறு ஏற்படும் நிதிப்பற்ருக் குறையைச் சமாளிப்பதற்கும், அந்நிய நாடுகளிலிருந்தே பணத்தையும் மூலதனங்களையும், மூலப் பொருட்களையும் மேற்கண்டவாறு பறித்துக் கொள்கிறது. இதற்கென சோஷலிச நாடல்லாத, ஏனைய நாடுகளில் உள்ள தரகு முதலாளிகள், கள்ளக் கடத்தல் காரர், கறுப்புபண முதலாளிகள் யாவரும் தமது நாட்டையும் மக்களையும் 'காட்டிக் கொடுத்து' அமெரிக்காவுக்கு விசுவாசிகளாக இருந்து தமது ''கடமை''களைச் செய்கின்றனர்.

ஆகவேதான் அமெரிக்கா எனும் ஒரு நாடும் அதன் அடிவருடிகளும் வாழ்வதற்காகவே, சோஷலிச நாடல்லாத ஏனைய நாடுகள் சுரண்டப்படுகின்றன. என்பது மிகத் தெளிவாகின்றது.

இதிலிருந்து தமிழீழ விடுதலையை வேண்டி நிற்கும் நாம் கற்றுக்கொள்ளக் கூடியது யாது? ஈழத்தின் தமிழ் மக்களது விடுதலை என்பது வெறும் ஆத்மீக ரீதியான, இனரீதியான விடுதலை அல்ல. பொருளாதார சுபீட்சமும், பொருளாதார ஒடுக்குமுறைகளினின்றும் எமக்கு விடுதலையும் கிடையாத வரையில், தமிழ் மக்களின் ''விடுதலை'' என்பது ஒரு பொய்மையே. மூன்ரும் உலகிலுள்ள பெரும் பெரும் நாடுகளே அமெரிக்கப் பிடியினின்றும் விடுதலை பெற்று பொருளாதார சுபீட்சமடைவதற்கு போராட வேண்டியுள்ளது. எமது தமிழீழமோ மிகச் சிறிய நாடு மூலவளங்கள் மிகக் குறைந்த நாடு. ஆரம்பத்திலிருந்தே, உள்ளூரச் சுரண்டலை ஒழித்து, திட்டமிட்ட சமுதாய அபிவிருத்திக் கேற்ற உற்பத்தி முறைகளையும், சகல மக்களுக்கும் சுவறும் வகையிலான வினியோக அமைப்பையும் கட்டிஎழுப்பாவிடில் இலக ஏகாதிபத்தியத்தின் கோரப் பிடிக்குள் நசுங்கிவிடும் நாடாகவே தமிழீழம் விளங்கும். அதாவது எண்ணைச் சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாக முடியும்.

முழு இலங்கையுமே இன்று அமெரிக்காவின் காலுக்குள் இருக்கும்போது. அமெரிக்காவுக்கு இன்று தனித் தமிழ் ஈழத்தால் ஒரு விசேட நன்மையும் கிடைத்துவிடப் போவதில்லை. பல்வேறு நாடுகளையும் பல்வேறு மக்களையும் உலகளாவிய ரீதியில், நேரிலும் மறைமுகமாகவும் சுரண்டி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்காவுக்கு கேவலம் ஒரு சுண்டைக்காய் அளவு தீவுள்ள தமிழ் இனத்தவர் கொடுமைக்குள்ளாவது பற்றி அக்கறை இருக்கப் போவதில்லை. அதிலும் இக்கொடுமையை யார் செய்கின்ருர்? தனது விசுவாசத்துக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான ஜே. ஆர். ஜெயவர்த்தனுவே செய்யும் போது. அதற்கெதிராக அமெரிக்க கொதித்து எழப் போகின்றதா?

ஆகவேதான் தமிழீழ விடுதலை என்பது இன ஒடுக்கலினின்றும் கிடைக்கும் விடுதலை மட்டுமல்ல: சகல ஒடுக்கு முறைகளினின்றும் விடுதலை பெற வேண்டிய போராட்டமாகின்றது.

★

சமூகப் புரட்சி சகல நாடுகளில் ஒன்றுபட்ட நடவடிக்கையாக இருக்க முடியாது. ஏனெனில் பெரும்பாலான நாடுகளும் உலக மக்களின் பெரும்பான்மையோரும் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தை இன்றும் அடையவே இல்லை அல்லது இப்பொழுதுதான் அடைந்துள்ளார்கள்.

—லெனின்

## அறிக்கை

கடந்த திங்கள் அம்பாறைக் காவல் நிலையத்தைத் தாக்கியதாக உரிமை கோரி ஒரு தவறுதலான கழகக் கண்டறிக்கை வெளிவரப் பெற்றது. இத் தவறுக்கு மனம் வருந்துகின்ருேம். இத் தாக்குதலை நடத்தியவர்கள் கழகத்தின் பெயரை தவருன முறையில் பயன்படுத்தியதை வன்மையாகக் கண்டிக்கின்ருேம்.

—செயலதிபர்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிரனடாவில் அமெரிக்க வெறியாட்டம்

அக்டோபர் 25, 1983 புலர் காலைப் பொழுதில், உலகின் வலிமை மிகுந்த ஓர் ஏகாதிபத்திய நாடான அமெரிக்கா உலகின் மிகச் சிறிய பாதுகாப்பற்ற நாடான கிரனடா மீது படையெடுத்தது.

இன்று இந்த சம்பவம் குறித்து மனிதாபிமானிகள் அனைவரும் வேதனையும், வெட்கமும் அடைகின்றனர்கள். சமாதான வெண்புறு ஒன்று, ரத்த வெறிகொண்ட வல்லூறின் பிடியில் சிக்கி தவிக்கும் கொடுமையையன்னவென்பது.

கிரனடா மீது அமெரிக்கா அப்பட்டமான ஆக்கிரமிப்பு நடத்தி உள்ளது. இது முன்கூட்டியே திட்டமிட்ட கொடிய வஞ்சனையே. கரிபியனிலுள்ள ஒரு சின்னம் சிறு தேசத்தின்மீது—பாதுகாப்பற்ற நாட்டின்மீது நடத்தப்பட்டுள்ள இந்த ஆக்கிரமிப்பு, சர்வதேச பயங்கரவாதத்தின் கோர சொரூபத்தையும் தோலுரித்து காட்டியுள்ளது. அமெரிக்காதான் இந்த சர்வதேச பயங்கரவாதத்தின் ராஜகுரு. கிரனடா மீது நடத்தியிருக்கும் இப்படையெடுப்பின் பின் ''ஜாரக்கிரதை, உங்களுக்கும் இதே கதிதான் நேரும்'' என்று நிக்ரேகுவாவையும் எல்சால்வடோரின் தேசபக்தர்களையும், கியூபாவையும் கூட வாஷிங்டன் பயமுறுத்துகிறது.

றீகன் நிர்வாகம் பதவிக்கு வந்ததுமே அதன் விஷப் பார்வை கிரனடா மீது விழுந்தது. பிரதமர் மாரிஸ் பிஷப்பின் அரசாங்கத்திற்கு எதிராகத் தொடர்ந்து அல்லும் பகலும் சதி செய்து வந்தது. கிரனடா தனது பகை நாடென்றும், தனது பாதுகாப்பிற்கு ஆபத்தானதென்றும் கொக்கரித்தது. இத்தனைக்கும் காரணம் 1979ல் கிரனடாவில் நிகழ்ந்த புரட்சியால் மலர்ந்த புதிய ஆட்சியே இப்புதிய ஆட்சி அமெரிக்காவின் ஆலோசனைகளை நிராகரித்து சமூக பொருளாதார வளர்ச்சியில் தனக்கென புதிய பாதையை வகுத்தது. சர்வதேச அரங்கில் கூட்டுசேரா கொள்கையை கடுமையாக பின்பற்றியது. இதுதான் கிரனடா செய்த மாபெரும் குற்றம். இந்த குற்றத்திற்குத்தான் இந்த கொடூர தண்டனை. கயானு ஜனாதிபதி போர்பெஸ் பர்ன்ஹாசம் நியூயோர்க் டைம்சுக்கு அளித்த ஒரு பேட்டியில் ''கிரனடா, அமெரிக்காவின் கண்களுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக தோன்றுகிறது. ஏனென்றால் அதன் சாதனைகள் அண்டை நாடுகளை கவர்ந்து விடுமோ என்று அமெரிக்காவுக்கு ஒரே அச்சம்,'' என்று கூறினார்.

கரிபியன் நாடுகளை தமது கொல்லைப்புறம் எனக் கருதி வந்த அமெரிக்கா இப்பொழுது கரிபியன் நாடுகள் சுதந்திரமாக சிந்திப்பதைக் கண்டு சினமுற்றன. சி. ஐ. ஏ. எவ்வளவோ ரகசிய நடவடிக்கைகளில் தலைகீழாக நின்று பார்த்தது. கிரனடாவில் அதன் ஜம்பம் பலிக்கவில்லை. அதனால்தான் இந்த நேரடி ராணுவ நடவடிக்கை. கிரனடா மீது நடைபெற்ற இராணுவ தாக்குதல்களுக்கான ஒத்திகையை அமெரிக்கா 1981 லேயே கரிபியனிலுள்ள விலகஸ் தீவில் நடத்திப் பார்த்தது.

துர்ரதிஷ்டவசமாக கிரனடா தலைவர்களிடையே ஓரளவு வேற்றுமை நிலவி வந்தது. இது முற்றிலும் கிரனடாவின் சொந்த விவகாரம் அவர்கள் தமக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டிய விஷயம். அமெரிக்கா கிரனடாவில் தலையிடுவதற்கு இந்த பிணக்குகளை துரோகத்தனமாக பயன்படுத்திக் கொண்டது.

அமெரிக்கா, கிரனடா மீது நடத்தியிருக்கும் படையெடுப்பு குறித்து நேட்டோ நாடுகளுக்குக் கூட மறைத்து வந்தது.

அக்டோபர் 27ல் ஒரு யு பி ஐ நிருபர் வாஷிங்டனிலிருந்து ஒரு பரபரப்பான செய்தியை அனுப்பினார். சைபான் என்னும் அமெரிக்க விமானந்தாங்கி கப்பலின் தலைமையின் ஒரு அமெரிக்க கடற்படை லெபனானை நோக்கி சென்று கொண்டிருந்த தென்றும், ஆனால் அக்டோபர் 21ம் திகதி கிடைத்த புதிய உத்தரவின்படி, அது திசையை மாற்றிக் கொண்டு இப்பொழுது கிரனடாவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது, என்றும் அவர் தெரிவித்தார். 1900 கடற்படை வீரர்களைக் கொண்ட 10 போர்க்கப்பல்கள் இந்தக் கடற்படையில் அடங்கியுள்ளன என்றும் அவர் கூறினார்.

எனினும் அமெரிக்க அதிகாரிகள் பொதுமக்களை ஏமாற்றும் கைங்கரியத்தில் இறங்கினர். கிரனடாவில் படைகளைக் கொண்டுபோய் இறக்கும் திட்டம் ஏதும் இல்லையென்று மறுத்தனர். ஆனால் அக்டோபர் 25, அதிகாலைப் பொழுதில் அமெரிக்க கடற்படை வீரர்கள் கிரனடாமீது

## முஸ்லிம் மக்களின் மாபெரும் வெற்றி

தமிழீழப் போராளிகளை ஒடுக்குவதற்காக அழைக்கப்பட்ட இஸ்ரேலின் ''மொஸாட்'' உளவுப் படை இலங்கையிலிருந்து வெளியேற்றப்படபோகிறதாம்.

இலங்கை அரசு மொஸாட்டுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் எதிர் வரும் அக்டோபர் மாதத்துடன் காலாவதியாவதாகவும் அதனால் நவம்பரில் ''மொஸாட்'' வெளியேறிவிடும் என்றும் அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள ''தினமின'' பத்திரிகை எழுதியுள்ளது. இத்தகவலை அரசவட்டாரங்களே கூறியுள்ளது.

''மொஸாட்'' வெளியேறப்போவதானது இலங்கை முஸ்லிம் மக்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

ஆரம்பத்தில் ''மொஸாட்'' வருகையை எதிர்த்து முஸ்லிம் மக்கள் கிளர்ந்தெழுந்தபோது ஜே. ஆர். ஜயவர்தன என்ன சொன்னார்? யார் என்ன செய்தாலும், எதைக் கூறினாலும் மொஸாட்டை வெளியேற்றப் போவதில்லை என்றதோடு, எதிர்ப்பவர்கள் அரசாங்கக் கட்சியிலிருந்தால் உடனே வெளியேறவேண்டும் என்றும் இறுமாப்புடன் கொக்கரித்தார்.

ஆனால் இன்று ''மொஸாட்'' வெளியேறும் நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம் மக்கள் ஈட்டியுள்ள இவ்வெற்றி குறிப்பிடத்தக்கதாகும்

எனவே எதிர் காலத்திலும் நாம் ஐக்கியப்பட்டு அநீதிகளை எதிர்த்தால் வெற்றி கிடைப்பது தவிர்க்கமுடியாததாகும் என்பதையே இச் சம்பவம் தமிழ் பேசும் மக்களுக்கு உணர்த்துகின்றது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

படையெடுப்பை ஆரம்பித்தனர். அத்துடன் அமெரிக்காவின் பிச்சையான டொலரை நம்பியிருக்கும் ஜமைக்கா, ஆன்டிகுவா, டொமினிகன் குடியரசு, பார்படாஸ், செயின்ட் வின்சென்ட், செயின்ட் லூசியா போன்ற நாடுகளின் படைவீரர்களையும் கிரனடா மீது படையெடுக்கத் தூண்டியது. இதன் நோக்கமே உலகிற்கு இது அமெரிக்காவின் ஆக்கிரமிப்பே என்பதை காட்டாமல், கபிரியன் நாடுகளின் கூட்டு நடவடிக்கை என்று காண்பிப்பதற்கே.

கிரனடாவை நான்கு மணி நேரத்தில் கைப்பற்றி விடலாம் என்று அமெரிக்கா போட்ட கணக்கு பொய்த்துவிட்டது. அவ்வளவு சுலபமாக கிரனடா பணிந்து விடுவதாக இல்லை. என்பிசி விமர்சகர் தாமஸ் புரோக்காவின் தகவலின்படி கிரனடா 29ம் திகதிவரை உக்கிரமான போர் நடத்திக் கொண்டு எதிரியை முன்னேற விடாமல் தடுத்து நிறுத்தியது. அமெரிக்காவின் போர்க்கப்பல்களும், விமானங்களும், ஹெலிகொப்டர்களும் சரமாரியாக நெருப்பையும் குண்டுகளையும் உமிழ்ந்து கொண்டிருந்தன. பல சிவிலியன்கள் கொல்லப்பட்டார்கள். தலைநகரில் ஒரு மருத்துவமனை அடியோடு அழிக்கப்பட்டது.

அமெரிக்காவின் கிரனடா மீதான ஆக்கிரமிப்பு, சர்வதேச உறவுகளில் எந்த எல்லைகளும் நியதிகளுமே இல்லாததுபோல் அமெரிக்கா எண்ணுவதை துல்லியமாகக் காட்டுகின்றது. உலகின் பல்வேறு பகுதிகளை அமெரிக்க பாதுகாப்பு மண்டலங்களாக எத்தகைய ஆதாரமுமின்றி அறிவிப்பதும், சுதந்திர நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதும் அமெரிக்க ஜனநாயகமாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவின் சுதந்திர நாடுகளின் மீதான தலையீடுகள் இடத்துக்கிடம் மாறுபடுகின்றன. ஆனால் இவை எப்பொழுதும் அப்பட்டமானதாகவும், ஆக்கிரமிப்பு வெறிகொண்டதாகவுமே இருக்கின்றன.

கிரனடா விசயத்தில் அமெரிக்கா தனது நேச நாடுகளை கூட கலந்தாலோசிக்காமல் அவர்களுக்கு தெரியாமல் இராணுவத் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது. இது எல்லாம் அவசியமான விசயம் என்று அமெரிக்கா கருதவில்லை. இது அமெரிக்காவை சார்ந்து நிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு படிப்பினையாகும். ஐரோப்பாவில் அமெரிக்கா ஈடுபடுத்தி வைக்க இருக்கும் ஏவுகளைகளைக் கூட இந்நாடுகளை கலந்தாலோசிக்காமலே அமெரிக்கா பாவிக்கும். அது அந்நாடுகளையும் ஏவுகணை யுத்தத்திற்கு இழந்துவிடும் அபாயத்தை நிட்சயம் கொண்டுவரும்.

அமெரிக்கா தனது ஏகாதிபத்திய நோக்கங்களை ஈடேட்டுவதற்கு எத்தகைய இழி செயல்களிலும் எப்படிப்பட்ட அடாத, அக்கிரம நடவடிக்கைகளிலும், எம்மாதிரியான மூர்க்கத்தனங்களிலும் கண்மூடித் தனங்களிலும் ஈடுபட சற்றும் தயங்காது எந்த பழிபாவத்திற்கும் அஞ்சாது என்பதை கிரனடாமீது அமெரிக்கா தொடுத்த போர் தெட்ட தெளிவாகக் காட்டுகிறது. நாளுக்கு நாள் விஸ்தரித்து வரும் அமெரிக்க பயங்கரவாதத்திலிருந்து எந்த நாடும், அதிலும் குறிப்பாக எந்த சிறிய நாடும் பாதுகாப்பாக இருக்க முடியாது. எனவேதான் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஒருசில அரசியல் சாகசவாதக்காரர்கள் பின்பற்றும் இந்த நாசகாரக் கொள்கையை உலக தேசங்கள் ஒன்றுபடு உறுதியாக முறியடிக்க வேண்டும் உன்னத மனித நேசக் கோட்பாடுகளை முன்னிட்டும், சமாதானம் பந்தோபஸ்தின் நலன்களை முன்னிட்டும். இந்த அபாயகரமான கொள்கை வழியை ஆழக் குழி தோண்டிப்புதைக்க வேண்டும்.

அனைத்து தேசங்களின் மனிதகுலம் முழுவதின் எதிர்காலத்துடன் விளையாட இந்த நச்சரவங்களை அனுமதிக்கக் கூடாது. "கிரனடாபடிப்பினை" நமக்கெல்லாம் அவசரமான எச்சரிக்கையாகும்.

---

## தமிழீழத்தின் குரல்
## Voice of Thamileelam

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் அதிகார பூர்வ ஒலிபரப்பான தமிழீழத்தின் குரல்—

ஒலிபரப்பு அலைவரிசைகள்

சிற்றலை 49 மீட்டர் 6300—6500 KHZ
சிற்றலை 49 மீட்டர் 6800—6900 KHZ
சிற்றலை 49 மீட்டர் 7100—7200 KHZ

குறிப்பு : ஏதாவது ஒரு அலைவரிசையில் எமது ஒலிபரப்புத் தடைப்பட்டால் உடனடியாக உங்கள் வானொலி மீட்டரை அடுத்த அலைவரிசைக்கு சிறிது நகர்த்தி எமது ஒலிபரப்பை தெளிவாகக் கேட்கலாம்.

நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| சனி, ஞாயிறு காலை | 7-00—8-00 மணிவரை | தமிழ் | ஒலிபரப்பு |
| | 8-00—8-00 | ஆங்கில | ஒலிபரப்பு |
| | 8-00—9-00 | சிங்கள | ஒலிபரப்பு. |
| சனி, ஞாயிறு மாலை | 4-00 – 5-00 | தமிழ் | ஒலிபரப்பு |
| | 5-00—5-30 | ஆங்கில | ஒலிபரப்பு |
| | 5-30—6:00 | சிங்கள | ஒலிபரப்பு |

இந்தப் புரட்சிகர வானொலியை வெளிநாடுகளிலுள்ளவர்கள் செவி கொடுக்க முடியாததால் அவர்களுக்காக உலகப் புரட்சிகர இயக்கங்களின் வானொலிகளிலும் நாம் எமது சேவையை மேற் கொள்கின்றோம் வெளிநாட்டிலுள்ளவர்கள் இந்த வானொலிச் சேவைகளை தெளிவாகக் கேட்கலாம்.

### தமிழீழத்தின் குரல்—ஐரோப்பிய சேவை

பிரான்ஸ் : (FRANCE)

பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) பிரான்ஸிலிருந்து நடத்தும் ஒலிபரப்புச் சேவையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் தமிழ், பிரான்ஸ் மொழிகளில் நிகழ்ச்சியை நடத்துகின்றது. எமது இந்த நிகழ்ச்சிகளை பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் பாரீஸ் நேரப்படி காலை 11-00—12-00 மணிவரை தமிழ் ஒலிபரப்பையும் 12-00 — 12-30 மணிவரை பிரான்ஸ் ஒலி பரப்பையும் FM 106 MHZ அலைவரிசையில் கேட்கலாம்.

நோர்வே : (NORWAY)

நோர்வேயிலிருந்து நடத்தப்படும் தனியார் வர்த்தக ஒலிபரப்புச் (Private Commercial Service) சேவையிலும் எமது தமிழீழத்தின் குரல் தமிழ் சேவையை பிரதி புதன் கிழமைகளில் காலை 7-00—7-30 மணிவரை SM 101 அலைவரிசையில் கேட்கலாம்.

www.tamilarangam.net

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சோழியன் குடுமி சும்மா ஆடுமா!

அமெரிக்கா ராஜ தந்திரிகளில் ஒருவர் றெபட் G.நியுமான். அரசியல் அறிஞரும், நூலாசிரியருமான நியுமான், அப்கானிஸ்தான், மொறுக்கோ, சவுதி அராபியா ஆகிய நாடுகளில் தூதுவராகப் பணியாற்றியவர். புறோப் (Prope) எனும் இந்தியப் பத்திரிகை அண்மையில நியுமானைப் பேட்டி கண்டபோது அவர் கூறிய தகவல்கள் எமது சிந்தனைக்குரியன.

பாகிஸ்தானுடன் அமெரிக்கா கொண்டுள்ள உறவைப்பற்றி கூறும்போது அவர் கருதுகின்றார், ''நாம் பாக்கிஸ்தானுடன் விசேட உறவைக் கொண்டுள்ளோம். இதற்கு சில காரணங்கள் உண்டு. சோவியத்தின் ஆதிக்கத்திலுள்ள ஆப்கானிஸ்தானை மீட்பதற்கு அமெரிக்கா உதவ வேண்டும் இந்த உதவியை பாக்கிஸ்தானுக்கூடாகவே அனுப்ப முடியும் இப்பிரச்சினையில் பாகிஸ்தான் எம்முடன் ஒத்துழைப்பதால், பாகிஸ்தானுக்கும் ஆபத்து நேரிடலாம் எனவே பாகிஸ்தானை பலப்படுத்த வேண்டியது அவசியம்.

நாடுகளுக்கு அமெரிக்கா வளங்கும் பொருளாதார உதவிகள் பற்றிக் குறிப்பிடுகையில், ஒரு நாட்டுக்குப் பொருளாதார உதவி வளங்கும்போது, அந்நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதாகின்றது. பொருளாதார உதவி வளங்க மறுக்கும் போதும், அது தலையீடாகவே முடிகின்றது.

அமெரிக்க உதவி என்பது அமெரிக்க தலையீட்டின் வெளிப்பாடே என்பதை அப்மட்டமாகக் கூறிவிட்டார் அமெரிக்க தூதுவர் நியுமான்.

தானம் தந்தமாட்டின் பல்லைப் பிடித்துப் பார்க்க வேண்டும் என பல ஆண்டுகளுக்கு முன் இந்திய விஞ்ஞான மேதை சி. வி. இராமன் அவர்கள், இந்தியாவுக்கு உதவியாக வளங்கப்பட்ட விஞ்ஞான உபகரணங்களைப் பற்றிக் கூறியதும் இங்கு நினைவு கொள்ள வேண்டியதே.




கடந்த ஆண்டு ஜுலை 25, 27-ம் திகதிகளில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழீழப் போராளிகளுக்கும்-ஜுலை கலவரத்தில் இறந்த ஏனையோருக்கும் அஞ்சலி செலுத்து முகமாக தமிழீழ மாணவர் பேரவை சென்னையில் 25-7-84 அன்று நடத்திய மாபெரும் மௌன ஊர்வலத்தில் ஒரு பகுதியினர்-

உங்கள் கையில் தவழும் ஒவ்வொரு இதழும் சிறிலங்கா அரசாங்கத்தினதும் எதிர்புரட்சியாளரினதும் கடுமையான தடைகளை மீறியே வந்து சேருகிறது. ஆகவே ஒவ்வொரு இதழையும் வீணாக்காது எல்லோருக்கும் படிக்க கொடுக்கவும்.

வெளியீடு: செய்தி-தொடர்பு திணைக்களம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்